DEPOSITION OF WITNESS
IN THE I ADDITIONAL DISTRICT COURT (PCR),
TIRUCHIRAPPALLI.
**Spl.S.C.No. 24/2024**
**P.W. 13**

| | | |
|---|---|---|
| Name | : | திரு.பழனிவேல் |
| Father's Name | : | திரு.எல்லப்பன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 45 |

(Accused 1 and 2 are present.)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 20th day of August 2025.

**முதல் விசாரணை**

நான் தற்போது துறையூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் தனிவட்டாட்சியர் சமூக பாதுகாப்பு திட்டத்தில் பணியில் இருக்கிறேன். கடந்த *27.02.2024* அன்று நான் மண்ணச்சநல்லூர் வருவாய் வட்டாட்சியராக பணியில் இருந்தபோது ஜீயபுரம் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் வேண்டுகோளுக்கிணங்க விசாரணை மேற்கொண்டு மண்ணச்சநல்லூர் இனாம் கல்பாளையம் அரிசன தெருவை சேர்ந்த நல்லையன் மகன் விஜயமாணிக்கம் மற்றும் மேல்பத்து, புக்காதுறை, அரிசனதெருவை சேர்ந்த மணி மகன் பிரபாகரன் ஆகிய இருவரும் இந்து பறையர் எனப்படும் பட்டியல் வகுப்பை சேர்ந்தவர்கள் என்றும், இந்த வழக்கின் எதிரிகளான சதிஷ்குமார் என்பவர் இந்து முத்துராஜா எனப்படும் பிற்படுத்தப்பட்ட வகுப்பை சேர்ந்தவர் என்றும், மற்றொரு எதிரி பிரகாஷ் இந்து, ஆண்டி பண்டாரம் எனப்படும் பிற்படுத்தப்பட்ட வகுப்பை சேர்ந்தவர் என்றும் சாதி சான்று மெய்தன்மை சான்று வழங்கினேன். நான் வழங்கிய சாதி சான்று மெய்தன்மை சான்று **அ.த.சா.ஆ.***9* ஆகும். காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

நான் வழங்கிய அறிக்கையில் நாள் என்று குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் தேதி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். கையொப்பத்தில் தேதி குறிப்பிட்டு இருக்கிறேன்.

**<u>மறுவிசாரணை</u> – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

(ஒம்.)XXXXX,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

Apex Copy

**DEPOSITION OF WITNESS**
**IN THE I ADDITIONAL DISTRICT COURT (PCR),**
**TIRUCHIRAPPALLI.**
**Spl.S.C.No. 24/2024**
**P.W. 14**

| | | |
|---|---|---|
| Name | : | திரு.முத்துசாமி |
| Father's Name | : | திரு.சின்னப்பன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 61 |

(Accused 1 and 2 are present.)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 20th day of August 2025.

**முதல் விசாரணை**

கடந்த 31.05.2024 அன்று நான் காவல் துறையில் உதவி ஆய்வாளராக இருந்து பணி ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 30.01.2024 ம் தேதி மண்ணச்சநல்லூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது திருச்சி அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த நல்லையன் மகன் மாணிக்கம் என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தை பதிவு செய்து நிலையம் வந்து அந்த புகார் வாக்குமூலத்தின் தன்மை படி காவல் நிலைய குற்ற எண்.31/2024, பிரிவுகள் 294(b), 323, 324, 506(ii) IPC r/w.3(1)(r), 3(1)(s),3(2)(va) SC/ST Act ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ.10** ஆகும். பிறகு அசல் புகார் வாக்குமூலத்தையும், முதல் தகவல் அறிக்கையும் கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். இந்த வழக்கு எஸ்சி/எஸ்டி வழக்கு என்பதால் புலன்விசாரணை அதிகாரியை நியமிக்கவேண்டி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் அனுப்பி வைத்தேன். இதுசம்பந்தமாக காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

சம்பவம் நடைபெற்ற அன்றே முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேனா என்றால் மறுநாள் பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கையை 30.01.2024 அன்று நீதிமன்றத்திற்கு அனுப்பி விட்டேன். அந்த முதல் தகவல் அறிக்கையானது 31.01.2024 அன்று பிற்பகல் 3.05 மணிக்கு தான் நீதிமன்றத்தால் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தை புகார்தாரர் சொல்ல சொல்ல நான் தான் எழுதினேன். முதல் தகவல் அறிக்கை நகலில் புகார்தாரிடம் கையொப்பம் வாங்கவில்லை என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தின் முடிவில் இருந்து புகார்தாரரின் கையொப்பம் 1 ½ செ.மீ இடைவெளியில் உள்ளது. ஆஜர் எதிரிகள் என்ன ஜாதியை சேர்ந்தவர்கள் என்றால் இருவரும் இந்து முத்துராஜா வகுப்பை சார்ந்தவர்கள் ஆகும். முதல் எதிரி மட்டும் முத்துராஜா வகுப்பை சேர்ந்தவர் என்றும், 2 வது எதிரி ஆண்டி பண்டாரம் வகுப்பை சேர்ந்தவர் என்றால் சரியல்ல. எதிரிகள் எந்த வகுப்பை சேர்ந்தவர்கள் என்று தெரியாமல் எஸ்சி/எஸ்டி வழக்கு பொய்யாக பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. புகார் வாக்குமூலத்தை நானே எழுதியதால் வழக்கிற்கேற்றாற்போல் எழுதியிருக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

(ஒம்.)XXXXX,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

Advocate